பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த ஆண்டு 41 குளங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு 31 குளங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், 47 குளங்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வருடம் 78 குளங்களும், கடந்த வருடம் 60 குளங்கள் என மாநகராட்சியில் 246 குளங்களில் கடந்த 4 ஆண்டுகளில் 231 குளங்களில் தூர்வாருதல், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் புதிய குளங்கள் உருவாக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கார்கில் நகர் குளத்தில் கட்டுமானக் கழிவுகள் கொட்டப்பட்டு நீர்பிடிப்புப் பகுதிகள் இல்லாமல் இருந்தது. சின்ன மழை பெய்தாலும் நீர் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு சென்று விடும் நிலையில் இருந்தது. தற்போது இந்த வருடம் புயல் மழையினை எதிர்நோக்கியும் இந்தப் பகுதியில் நீர்த்தேக்கம் இல்லாமல் மக்கள் இயல்பு நிலையில் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தாழ்வான பகுதிகள் கண்டறியப்பட்டு இதுபோன்ற கால்வாய் மற்றும் குளங்கள் அமைத்திட மாநகராட்சியின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் பணிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு, மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 1.20 இலட்சம் வண்டல் வடிகட்டித் தொட்டிகளிலும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சிறு சிறு பகுதிகளில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த மழைக்கு முன்னதாக 32 நீர் உறிஞ்சும் பூங்காக்கள் இருந்தன. தற்போது, கடந்த 8 மாதங்களில் 108 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமில்லாமல், மழைக்காலத்திற்கு முன்னதாக தாழ்வான பகுதிகளில் அக்டோபர் 1ஆம் தேதி முதல் 1,496 மோட்டார் பம்புகள் தயார்நிலையில்

வைக்கப்பட்டிருந்தன. மாநகராட்சியின் 36 படகுகள், மீன்வளத்துறையின் சார்பில் 91 படகுகள் தயார்நிலையில் முன்னெச்சரிக்கையாக வைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகள் தற்போது பெய்த மழையினை எதிர்கொள்ள பெரும் உதவியாக இருந்தது.

மேலும், குளங்கள் என்பது மழைக்காலத்திற்கு மட்டும் மழைநீர் சேமிக்கும் வகையில் உதவியாக இல்லாமல், பிற காலத்திற்கும் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கும் மிகவும் உதவும். மழைக்காலங்களில் மட்டும் நிலத்தடி நீர்மட்டம் உயர்வது இல்லாமல், இதுபோன்ற குளங்கள் அமைக்கப்படுவதால் அனைத்து நாட்களிலும் நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் அனைவரும் பயன்படும் வகையில் அமையும். மேலும், குளங்கள் மட்டும் அமைக்காமல் குளங்களைச் சுற்றிலும் மக்களின் பொழுதுபோக்குக்காக நடைபாதை, பூங்கா, விளையாட்டுப் பகுதிகள் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட பயன்கள் தருவதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இதுபோன்ற புதிய குளங்கள் அமைத்தல், ஏற்கனவே உள்ள குளங்களை தூர்வாரி ஆழப்படுத்துதல், நீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைத்தல் பணிகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்தார்.

மாநகராட்சிப் பகுதிகளில் 246 குளங்கள் உள்ளன. இதில் 1.01 டி.எம்.சி. நீர் சேமிப்புத் திறன் இருந்தது. தற்போது மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் காரணமாக கூடுதலாக 1.1 டி.எம்.சி. நீர் சேமிப்புத் திறன் அதிகரிக்கப்பட்டு, மழைக்காலங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மழைநீர் செல்லாமல் தடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மழையின் போது மழை பெய்து 2 மணி நேரத்திற்கு மேலாக மழைநீர் தேங்கியதாக கருதப்பட்ட 87 இடங்கள் கண்டறியப்பட்டு, அந்த இடங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது பெய்த மழையில் 61 இடங்களில் 2 மணி நேரத்திற்கும் மேலாக நீர்த்தேக்கம் இருந்தது. அதுவும் 3 முதல் 4 மணி நேரத்திற்குள்ளாக வடிந்து விட்டது.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் இதுபோன்ற குளங்கள் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பிற துறைகளைச் சார்ந்த இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்படும் இடங்கள் மற்றும் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு தேவைப்படும் இடங்களில் சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து குளங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருவொற்றியூர் போன்ற இடங்களில் குறுகலான தெருக்கள் உள்ள இடங்களில் மழைநீர் வடிகால் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகள் அமைப்பது கடினம். அந்த இடங்களில் ஜெர்மன் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் Eco Block மூலமாக நீரினை உறிஞ்சு சேமித்து வைத்துக் கொள்ளும் கட்டமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இவ்வாறாக குளங்கள் மேம்பாடு, மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைத்தல், புதிய குளங்கள் அமைத்தல், குளங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக பருவமழைக் காலங்களில் அதிக அளவில் மழைநீரைச் சேமித்து சாலையில் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர்த் தேக்கத்தை தவிர்ப்பதற்கும், மழைநீரை நிலத்தடியில் சேமிப்பதற்கும் மிகச் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மக்கள் நலன் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**